# தொல்காப்பிய மன்றம் - கனடா

**தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்**
**வரலாறும் பண்பாடும் அறிவோம்**
**2020**

## தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 4

## 2012இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மணற்கேணி போன்று கற்கக் கற்கக் குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் தமிழர் நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்கு கின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன.

# தொல்காப்பிய மன்றம் - கனடா

இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன. அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டு வருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றித் தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழிகளைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.


கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறும் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின் செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

# உறவு முறைகள்

| | |
|---|---|
| <br>சித்தி | <br>சித்தப்பா |
| <br>அக்கா | <br>அத்தான் |
| <br>மச்சான் | <br>மச்சாள் |
| <br>அண்ணி | <br>பாட்டி |

# உடல் உறுப்புகள்



**விரல்கள்**



**சுட்டுவிரல்**




**பெருவிரல்**



**நடுவிரல்**



**மோதிரவிரல்**



**சின்னவிரல்**











**முழங்கால்**



**தொடை**

# நிறங்கள்

| | |
|---|---|
| <br>பச்சை | <br>சிவப்பு |
| <br>மஞ்சள் | <br>நீலம் |
| <br>கருப்பு - கறுப்பு | <br>வெள்ளை |
| <br>ஊதா | <br>செம் மஞ்சள் |

# எழுத்தை அடையாளம் காணல்

| | |
|---|---|
| 11<br>பதினொன்று | 20<br>இருபது |
| 30<br>முப்பது | 40<br>நாற்பது |
| 50<br>ஐம்பது | 60<br>அறுபது |
| 70<br>எழுபது | 80<br>எண்பது |

# உதவுமிடங்கள்




தபாலகம்




மருந்தகம்




உணவகம்



அச்சகம்



பணியகம்



தொழிலகம்




விலங்ககம்




அருங்காட்சியகம்


# உதவுமிடங்கள்



வீடு



பாடசாலை



வைத்தியசாலை



நூலகம்




காவல்நிலையம்



நீதிமன்றம்



கடைகள்



உணவகம்

# பறவைகள்



வாத்து



கிளி



மயில்



பருந்து



புறா



செண்பகம்



கழுகு



மைனா


# மிருகம்



குரங்கு



சிங்கம்



வரிக்குதிரை



கழுதை



மான்



எலி



எருமை



அணில்

# உணவு



கஞ்சி



பொங்கல்



பாயாசம்



கழி



இடியப்பம்



கூழ்



சோறு



கொத்து ரொட்டி

# உந்துவகை



மகிழுந்து



பேருந்து



மிதியுந்து



தொடருந்து



விண்ணுந்து



நீர்மூழ்கி



பாரவூர்தி



முச்சக்கரவண்டி

# தளபாடம்



கட்டில்



மேசை



பானை



நாற்காலி




அடுப்பு



செம்பு



கிண்ணம்




கரண்டி

# பூச்சி வகை



மழைப்பூச்சி



விட்டில்



கரப்பான் பூச்சி



மின்மினிப்பூச்சி



சிலந்தி



தேனீ



மூட்டைப்பூச்சி



நுளம்பு

# ஊர்வன



பாம்பு



நட்டுவாக்காலி



எறும்பு



ஓணான்



பல்லி



பச்சோந்தி



அரணை



கறையான்

# நீர் வாழ்வன



விலாங்கு




நண்டு




தவளை



இறால்




சுறா



முரல்



கணவாய்



திமிங்கிலம்

# இலத்திரனியல்



வானொலிப்பெட்டி




தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



மடிக்கணினி



மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி




தொலைபேசி



கைத்தொலைபேசி

# மிருகங்கள்

| | |
|---|---|
|  காளை |  பன்றி |
|  கழுதை |  குதிரை |
|  ஆடு |  மலை ஆடு |
|  எருமை |  கருஞ்சிறுத்தை |

# காய்கறிகள்




கரட்



வாழைக்காய்



முள்ளங்கி



கெக்கரிக்காய்



வெண்டிக்காய்



அவரைக்காய்



பீர்க்கங்காய்



சுரைக்காய்

# கிழங்கு வகை


உருளைக்கிழங்கு


மரவள்ளிக்கிழங்கு


சேப்பங்கிழங்கு


இஞ்சி


சேனைக்கிழங்கு


கருணைக்கிழங்கு


பனங்கிழங்கு


பீற்றூட்

# இலை வகை



கீரை



வல்லாரை



பொன்னாங்காணி



புதினாக்கீரை



கறிவேப்பிலை



முட்டைக்கோவா



முட்டைக்கோசு - பூக்கோசு



கூனைப்பூ

# பூக்கள்



பருத்திப்பூ



அரளிப்பூ



கொன்றைப்பூ



செவ்வரத்தம்பூ



வாழைப்பூ



அல்லிப்பூ



செவ்வந்திப்பூ



எருக்கலம்பூ

# தொல்காப்பிய மன்றப் பாடல்

# வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை – தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே – எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை – நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து – தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் – தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது – வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக – ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம்
   (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன்
   (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன்
   (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன்
   (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா
   (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

**கையேடு - 4**

## தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது.

வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.

சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.

சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

## 2020 பிரிவு 4 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2012இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம்.

**இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்**

1. **பேச்சுப் போட்டி**

   பேச்சுப் போட்டிக்குரிய பேச்சு கையேட்டில் உள்ளது.
   சிறுவர் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை மனனம் செய்து நடுவர்கள் முன்னிலையில் பேசவேண்டும்.

2. **படங்களுக்கான சொற்களைக் கூறுதல்:**

- இப்பிரிவினருக்கு 160 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- சொற்களைத் தெரிவுசெய்யும்போது குலுக்கல் முறையில் சொற்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரி களுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

3. **படங்களுக்குரிய சொற்களில் விடுபட்ட எழுத்தை எழுதுதல்:**

   இப்பகுதியில் கொடுக்கப்படும் படத்தில் விடுபட்ட எழுத்தை நிரப்ப வேண்டும்.

# 2020 கனடா தொல்காப்பிய மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டி

**பிரிவு: 4** **அகவைப் பிரிவு: 8**

## தமிழ் மொழி

**வணக்கம்.**

தமிழ் எங்கள் தாய்மொழி.
உலகில் மிகவும் தொன்மைமிகு மொழி தமிழ்மொழி.
நீண்ட காலமாகப் பேசி எழுதப்பட்டு வரும் மொழியும் தமிழ்தான்.
தமிழில் உள்ள முதல் எழுத்துகள் 30 ஆகும்.
உயிரும் மெய்யுந்தான் தமிழில் முதல் எழுத்துகள்.
இதனைத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறியுள்ளார்.
உயிர் எழுத்துகள் 12. மெய் எழுத்துகள் 18.
இவற்றோடு ஆய்த எழுத்தும் உள்ளது.
மெய்யொடு உயிர் கலக்கும்போது உயிர்மெய் எழுத்து உருவாகின்றது.
இவ்வாறு உருவான 216 உயிர்மெய் எழுத்துகள் உள்ளன.
தமிழில் மொத்தமாக இருநூற்றி நாற்பத்**தேழு**(247)எழுத்துகள் உள்ளன.
உயிர்எழுத்துகளை ஒலிப்பின் அளவீட்டால் குறில், நெடில் என்று கூறுவர்.
மெய் எழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என ஓசையின் தன்மையால் மூன்றாக வகைப்படுத்தினர்.
**தமிழ்** என்ற எழுத்தில் இந்த மூன்று வகை எழுத்துகளும் உள்ளன.
காலத்தின் மாற்றத்திற்கு ஈடுகொடுத்து எமது மொழி நிலைத்து நிற்கின்றது.
எமது தாய்மொழி நிலைபெற நாம் அதனைக் கற்கவேண்டும்.
நாம் ஒவ்வொருவரும் பல மொழி தெரிந்த தமிழராய் வாழுவோம்.
எமது எதிர்காலச் சந்ததிக்கு எமது மொழியை எடுத்துச் செல்வோம்.
மற்ற இனத்தவருக்கும் எமது தமிழின் பெருமையை எடுத்துச் சொல்வோம்.
உலகில் மூத்த குடியினர் தமிழர் என்பதை உலகறியச் செய்வோம்.
எமது தமிழையும், வரலாற்றையும் விருப்புடன் கற்போம்!
அனைவரும் தமிழ் தெரிந்த தமிழராய் வாழ்வோம்!!

**நன்றி . வணக்கம்.**




தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பிய மன்றம்
கனடா

# தமிழ்த்திறன் போட்டி
# பிரிவு 4
# 2012இல் பிறந்தோர்

Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada



நவீன வடிவமைப்புடன் அனைத்து விதமான இணையத்தள தேவைகளுக்கும்
RouterSale.com
விற்பனைக்கு பிறகுமான சேவை
தேர்ச்சி பெற்ற வடிவமைப்பாளர்கள்
Mobile Friendly
Until You satisfied unlimited free updates
We Train You to Do the Updates on your site by yourSelf.
Standard SEO service included
647-891-7253
email us info@routersale.com




FREE STAGING
FREE HOME EVALUATION
FLEXIBLE COMMISSION
Your popular neighbourhood realtor
HOMELIFE/FUTURE REALTY INC. BROKERAGE.,
Independently Owned and Operated
RAJKUMAR RASIAH
Sales Representative
MULTIPLE LISTING SERVICE
Dir : 416-707-1674
Off: 905-201-9977
Fax: 905-201-9229
r_rasiah@hotmail.com
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
www.rajkumarhomes.ca